ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 19
ஆவணி 1 – 30
2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் 19 வாயிலாக எம்மவர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி!

நாங்கள் பத்திரிகை எம்மவர்களை ஆவணப்படுத்தும் செயற்பாடுகளுடன் எமது கிராமத்தை எவ்வாறு அழகாகவும், சத்தமாகவும் வைதத்திருப்பது தொடர்பான விடயங்களையும் தனது ஆசிரியர் தலையங்களின் வாயிலாக வலியுறுத்தி வருகின்றது. வடமராட்சிப்பகுதியில் சகல வளங்களும் நிறைந்த கிராமமாக திகழ்வது எமது கிராமம். எமது கிராமம் படிப்படியான அபிவிருத்திகளைக் கண்டு இன்று பார்போற்றும் கிராமமாக மிளர்கின்றது. எமது ஊரில் பல்வேறு ஆளுமை திறன்கள் உள்ள பலர் வாழ்கின்றார்கள். அதன் காரணமாக பல்வேறு பகுதியை சேர்ந்தவர்களுக்கும் எமது கிராமத்துக்கு வர வேண்டிய தேவையும் உள்ளது. அழகான எமது கிராமம் மழை காலத்தில் வெள்ளத்தின் காரணமாக அழகு குலைந்து காணப்படுகின்றதை நாம் காண்கின்றோம். எமது கிராமத்தில் பல்வேறு வீதிகள் மழைக்காலத்தில் பயன்பாட்டிற்கு சிரமானதாக இருக்கின்றதை பயணத்தின் வழி அறிகின்றோம்.. வெள்ளம் தேங்கி நின்று பயணிகளுக்கு அசௌகரி யத்தைக் கொடுக்கின்றதை அவதானிக்கின்றோம். உதாரணமாக செல்லையா வீதியின் முதல் திருப்பம், செல்லையா வீதியின் மூன்றாவது திருப்பம், புதுவீட்டுச்சந்தி, காத்தவராயர் ஆலயத்துக்கு செல்லும் மதகுக்கு அண்மித்த பகுதி போன்றவற்றை சில உதாரணங்களாகக் கொள்ளலாம். பாதசாரிகள், பாட சாலை மாணவர்கள் மிகுந்த சிரமங்களை மழைக் காலத்தில் எதிர் கொள்கிறார்கள். இந்த விடயத்தை நாம் கருத்தில் எடுத்து இது தொடர்பான அபிவிருத்தி களை பெற முயல வேண்டும். தற்போதைய காலத்தில் நீர் தேங்கி நிற்பதால் ஏற்படும் டெங்கு நுளம்பினால் ஏற்படும் பாதிப்பை அனைவரும் அறிவோம்.

– க.பரணீதரன்

## உள்ளே...

**சைவஒளி:**
**அமரர் சைவப்புலவர் க. இராசையா**



**அது ஒரு காலம் –12**
**அந்தியேட்டி நிகழ்வும் கீரிமலைப்பயணமும்**

**மிருதங்கக் கலைஞர்**
**செல்லையா செல்வராசா**



**எம்மவர்கள் சிறுகதை – 9**
**ஆத்மாவின் ராகங்கள் – அல்வை சசி**

**எம்மவர்கள் சிறுகதை – 10**
**சொந்தமில்லா பந்தங்கள் – ப.விஷ்ணுவர்த்தினி**

**அஞ்சலி**
**1.மகேந்திரராணி துரைராசா**
**2.கணபதிப்பிள்ளை வினாயகராசா**
**3. இராஜேஸ்வரி தணிகாசலம்**

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# சைவ ஒளி : அமரர் சைவப்புலவர் க.இராசையா

கலாநிதி த.கலாமணி

நீறு இலங்கும் நெற்றி, நெற்றி நடுவே ஒரு சந்தனப்பொட்டு புன்னகையில் மலர்ந்த முகம், தேஜஸ் நிறைந்த மெய் ஆகிய அங்க இலட்சணங்களோடு வாழ்ந்து இறையடியில் இணைந்தவர்தான் அமரர் சைவப்புலவர் க.இராசையா அவர்கள். அவர் என்றும் சைவ ஒளியாய்த் திகழ்ந்தவர். சைவ வாழ்வு வாழ்ந்து இளைய சமுதாயத் துக்கு வழிகாட்டியவர். சைவ வாழ்வில் பலரையும் ஆற்றுப் படுத்தி, நேர்மை, கண்ணியம், காருண்யம் மிக்கவராய் வாழ வேண்டியமை மனிதரின் கடமை என உணர்த்தி, தம் வாழ்நாள் முழுவதும் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் சைவப்புலவர் இராசையா அவர்கள்.

சைவப்புலவர் இராசையா அவர்கள் எமது அல்வாய்க் கிராமத் தைச் சேர்ந்த வ.கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் துன்னாலை குருக் கட்டைச்சேர்ந்த இலட்சுமிப்பிள்ளை அவர்களுக்கும் செல்வப்புதல்வனாக ஆயிரத்துத்தொளாயிரத்து முப்பத்து நான்காம் ஆண்டு தை மாதம் மூன்றாம் திகதியன்று பிறந்தார். சகோதரி நாகரத்தினம், சதாசிவம், சாம்பசிவம் ஆகியோர் இவரின் உடன் பிறப்புகளாவர். சிறுவயதிலிருந்தே இராசையா அவர்கள் குடும்பத்தி னராலும் உறவினர்களாலும் அயலவர் களினாலும் மிகவும் நேசிக்கப்படுபவராக இருந்தார். இதனால் அவர்கள் இவரை "பெரிய இராசா" என்றே அழைத்து வந்தனர்.

இராசையா அவர்கள் ஆரம்பக்கல்வியை ஞானாசாரியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை திரு இதயக் கல்லூரியிலும் மேற்கொண்டார். கல்வி கற்கும் காலத்திலேயே மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றிப் பலவிருதுகளையும் பெற்றுக் கொண்டதுடன் சிறந்த மெய்வன்மையாளராக ஆசிரியர்களால் பாராட்டப்பட்டார். திரு இருதயக் கல்லூரி அந்நாளில் மிகுந்த கட்டுப்பாடுடன் விளங்கிய ஒரு கல்லூரியாகும். இங்கு ஆங்கிலமொழி யிலும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆங்கில மொழியில் சகல பாடங்களையும் கற்று எஸ்.எஸ்.ஸீ பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றார். நல்லூர் ஆசிரிய கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சிபெற்று தராதரப்பத்திரம் பெற்ற இராசையா அவர்கள் தாம் பெற்ற ஆங்கிலப் பயிற்சியின் பேறாக அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஆசிரிய நியமனம் பெற்றார். இவ்வித்தியாசாலையில் பெற்ற அனுபவத்துடன் மேல்மாகாணத்தின் பல பகுதிகளிலும் உள்ள பாடசாலை களில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றினார். இவ்வகையில் வறக்காப்பொல தும்மலதெனியா முஸ்லிம் மகாவித்தி யாலயம், எட்டியாந்தோட்டை கறாகொட முஸ்லிம் மகா வித்தியாலயம், கேகாலை சென்ற்.மேரீஸ் தமிழ் மகாவித்தியாலயம் ஆகியன இவர் சேவையாற்றிய பாடசாலைகளாகும். இறுதியாக, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து, சேவையி லிருந்து ஓய்வுபெறும்வரை இப்பாடசாலையிலேயே கடமையாற்றினார்.

இராசையா அவர்கள் சேவையாற்றிய பாடசாலைகளிலெல்லாம்



இவரின் எளிமை, நேர்மை, இரக்ககுணம், கடமையில் கண்ணியம் போன்றவற்றுக்காக மாணவர் களாலும் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் அதிபர் களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட ஒருவராக இவர் விளங் கினார். மாணவர்களிடம் அன்பு பாராட்டி அவர்களுக்கு வழிகாட்டி, மாணவர்களிடம் நல்ல பண்புகளையும் பழக்கங் களையும் விதைத்து அவர்களை நன்மாணாக்கராக உருவாக்கிய வகையில் அந்த மாணவர்கள் என்றும் இராசையா அவர்களை “கருமவீரன்” என்றே போற்றி வணங்கினர்.

இராசையா அவர்கள் வதிரி ஐம்மூலையைச் சேர்ந்த மாணிக்கம் ஆசைப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகள் மீனாட்சியம்மா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். அந்நாளில் எமது ஊரவர்கள் பிற ஊர்களில் சம்பந்தம் செய்யும் வழக்கம் இருக்கவில்லை. இந்நிலையில் இராசையா மீனாட்சியம்மா ஆகியோரின் திருமணம் அல்வாய்க்கும் வதிரிக்குமிடையே ஏற்பட்ட முதலாவது உறவுப்பாலமாக அமைந்தது. துரதிஷ்டவசமாக ஒரு வருட இல்லற வாழ்வின் நிறைவிலேயே மீனாட்சியம்மா அவர்கள் இயற்கை எய்திவிட, அவரின் சகோதரியான லீலா அவர்களை இராசையா அவர்கள் தமது இல்லறத்துணை யாகக் கொண்டார். இவர்களின் இல்லற வாழ்வில் சதீஸ்வரன், கலைவாணி, இந்திரபாலா, கௌரிபாலா, மயூரபாலா ஆகியோரை மக்கட் செல்வங்களாகப் பெற்றுக்கொண்டனர். லீலா அவர்கள் என்றும் தமது கணவரின் கல்விச் சேவைக்கும் சமயச் சேவைக்கும் சமூகசேவைக்கும் உறுதுணையாக விளங்கினார்.

சைவப்புலவர் இராசையா அவர்கள் தமது பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் தமது உறவிலுள்ள பிள்ளைகளைக் கல்வியில் ஊக்குவித்து, வழிகாட்டி சிறந்த உத்தியோகங்கள் பெறவும் வழிவகுத்தார். இவரது சகோதரரான சாம்பசிவம் அவர்கள் பட்டதாரியாகி, உயர் பட்டங்கள் பெற்று, விரிவுரையாளராக விளங்கி, இன்றும் தேசிய மட்டத்தில் மதிக்கப்பெறும் ஒரு கல்வியியலாளராக இருந்து வருகிறார். சைவப்புலவர் இராசையா அவர்கள் தமது உறவுகளிடம் என்றும் பாசமுள்ள ஒருவராகவே விளங்கினார். உறவுக் குடும்பங்களில் ஏற்படும் பிணக்கு களைத் தீர்த்து வைப்பதிலும் முன்நின்று உழைத்தார். தாம் புகுந்த இடம் வதிரியாயினும் எமது அல்வாய்க் கிராமத்திலுள்ள தமது நெருங்கிய உறவினர்களின் வீடுகளுக்கு இடைஇடையே சென்று வந்து அவர்களின் சுகம் விசாரித்து வந்தார். தமது மாமியாரான தங்கம் நாகமுத்து அவர்கள் இறந்த பின்பு அவர் வாழ்ந்த காணியை தமது ஒன்றுவிட்ட சகோதரன் (சிறியதந்தையின் மகன்) அவர்களுக்கு அந்தக் காணியை எழுதிக்கொடுக்க வேண்டும் என்று அக்காணியின் பங்காளர்கள் அனை வரையும் இணங்கச் செய்து அதனைச் செயற்படுத்தினார்.

சைவப்புலவர் இராசையா அவர்கள் இறுதியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றபின்பும் கல்விச்சேவையை எமது சமூகத்துப் பிள்ளைகளுக்கு வழங்கியதோடு சமயப் பணிகளிலும் ஈடுபட்டார். நல்ல அறக்கருத்துகளைக் கட்டுரைகளாக சந்நிதி யான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப்பேரவையின் “ஞானச்சுடர்” என்ற சஞ்சிகையில் எழுதிவந்தார். இப்பேரவையின் உறுப்பினராக இவர் விளங்கியதோடு, யாழ்.சைவபரிபாலன சபை செயற்பாட்டுக்குழு உறுப்பினராக வும் செயற்பட்டு வந்தார். வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயத்தின் சைவசமய பாதுகாப்புச் சபையின் தலைவராக நீண்ட காலம் கடமைபுரிந்து வந்த சைவப்புலவர் இராசையா அவர்கள் சமயக்கல்வியின் மூலம் வாய்மை, நேர்மை, ஒழுக்கம், இரக்கம் ஆகிய நல்ல பண்புகளை இளை யோரிடத்து வளர்க்கப் பாடுபட்டதோடு, சமயக்கல்வியின் மூலம் ஓர் ஒழுக்கமான உத்தம சமுதாயத்தையும் காண விழைந்தார்.

சைவப்புலவர் இராசையா அவர்களின் பிள்ளைகள் இன்று நல்ல நிலையிலே உள்ளார்கள். அவரின் பெயரைக்கேட்டாலே அவரை அன்போடு நினைவுகூரும் இளையோர் பலர் இன்றும் அவர் காட்டிய வழியில் வாழ்ந்து வருகிறார்கள். எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி எளிமையாகவும் உளசுத்தியோடும் சைவவாழ்வு வாழ்ந்து வந்த சைவப்புலவர் இராசையா அவர்கள் தமது அறுபத்தைந்தாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். உலகம் உள்ளவரை அவர் நாமம் வாழும்.



## அஞ்சலி
## மகேந்திரராணி துரைராசா
## 10.11.1955 - 05.08.2022

மகேந்திரராணி அவர்கள் துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 10.11.1955 ஆம் ஆண்டு சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். இவருக்கு மகேந்திரன் அவர்கள் சகோதரராகக் கிடைக்கப்பெற்றார். அல்வாயைச் சேர்ந்த வைத்தியர் துரைராசா அவர்களை மணம் புரிந்து திருமண பந்தத்தின் மூலம் அல்வாயுடன் இணைந்தவர். துரைராசா அவர்களுடன் இனிமையான வாழ்வு வாழ்ந்து அதன்பேறாக இராஜவேல், பாமதி, ஞானவேல், வேலும்மயிலும், நிலோஜன், ஜீவிதன், மாதுஜன் ஆகிய பிள்ளைகளைப் பெற்று இன்பமாக வாழ்ந்து வந்தார். சிந்தூரிக்கா, மாதுரி ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். அனைவருடனும் அன்பாக பேசி அமைதியாக வாழ்ந்து வந்த மமகேந்திரராணி அவர்கள் மூப்பின் காரணமாக 05.08.2022 அன்று இறைவனது பாதாரவிந்தங்களைச் சென்றடைந்தார். அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

- பரணீ

## அது ஒரு காலம் -12

# அந்தியேட்டி நிகழ்வும் கீரிமலைப்பயணமும்

■ செல்லக்குட்டி கணேசன்

அமரர் திருமதி மகேந்திரராணி துரைராசா அவர்களின் 31ம் நாளன்று அன்னாரது சாம்பலை கரைப்பதற்காக உறவுகளுடன் கீரிமலை புனித தலத்திற்கு நானும் சென்றேன். கடலலையையும், கீரிமலைக் குளத்தையும் வாய்க்கால் நீரோடையையும் பார்த்த போது கடலலையில் இருந்து மேற் கிளம்பும் வெண்நுரைபோல என்மனதில் எமது சிறுபராயத்து நினைவுகள் மேற்கிளம்பின. உண்மையிலே அது ஒரு காலம்.

எமது கிராமத்தில் இழப்புகள் நிகழ்ந்தால் 31ம் நாள் வீட்டிலோ, அல்லது அவரவர் குலதெய்வதலத்துக்கருகிலோ அல்லது கிணற்றடிக்கருகிலோ அந்தியேட்டி கிரியைகள் நடைபெறும். பின்னர் அன்னாரது சாம்பலை கரைப்பதற்காக கீரிமலைக்குச் செல்வார்கள். அதற்கான வாகன ஒழுங்கை உரியவர்கள் செய்வார்கள் அக்காலம் கீரிமலைக்குச் செல்வ தென்றால் "தட்டி வான்" களையே ஒழுங்கு செய்வார்கள். "தட்டிவான்" தனத்தியவத்தை குறிச்சியில் "அன்ன அகம்" வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

மேற் குறிப்பிட்ட ஓர் இடத்தில் கிரியைகள் நடைபெற்று சம்பந்தப்பட்டவர்கள் சாம்பல் இட்ட பானையையும், அமரத்துவ மடைந்தவருடைய நிழற்படத்தையும் தாங்கியவாறு மேள தாளத்துடன் ஊர்வலமாக வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கி வருவார்கள்.

இவ் ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னதாகவே சிறுவர் களாகிய நாங்கள் ஓடிச்சென்று தட்டிவானில் எங்களுக்கான இடங்களைப் பிடித்துக்கொள்வோம். பாடசாலை நாட்கள் என்றாலும் பாடசாலைக்குச் செல்ல மாட்டோம். ஒழித்துக் கொள்வோம். எமது ஆசிரியர்கள் எங்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்கள். எப்படியும் கீரிமலைக்குப் போன விடயங்களை அறிந்து கொள்வார்கள். அதற்கான தண்டனையும் மறுநாள் கிடைக்கும், கீரிமலைக்குப் போகும் போது ஒரு கட்டைக் களிசான் (Shorts) மேல் இன்னொரு களிசானை (Shorts) அணிந் திருப்போம். உள்ளே உள்ள களிசானுடன் தான் குளிப்போம்.

உருவப்படத்துடனான ஊர்வலம் வாகனம் நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்ததும் இளைஞர்கள், பெரியவர்கள் முதலில் எங்களை நோட்டமிடுவார்கள். பாடசாலை நாட்களாயின் நாங்கள் சற்று முழிசிக் கொண்டிருப்போம். பின்னர் எங்களை வாகனத்தில் இருந்து இறக்கி விடுவார்கள். அப்புறம் தாங்கள் ஏறிக்கொள்வார்கள். பின்னர் எங்களை ஏற்றிக்கொள்வார்கள். இடமில்லையெனில் தங்களது மடியில் அமரச்செய்வார்கள். எமது விபரங்களை தமது மனதில் ஏற்றிக் கொள்வார்கள். வாகனத்தில் இருக்கும் போது எங்களுக்கு அறிவுரை சொல் வார்கள். வாகனம் கீரிமலையை அடைந்தும் ஆர்வமேலீட்டி னால் மேலே உள்ள களிசானை (Shorts)யும், சேட்டையும் கழற்றி வாகனத்திற்குள் வைத்து விட்டு குளத்தை நோக்கி ஓடுவோம். ஆனால் குளத்திற்குள் இறங்கவோ, குதிக்கவோ மாட்டோம். எமக்கு மூத்தவர்கள் இறங்கி குளத்து நீரின் அளவைப் பொறுத்து எங்களை தாங்களே இறக்கி நீராடச் செய்வார்கள். தங்களின் கை மீது எங்களை படுக்க வைத்து குளத்துக்குள் சுற்றி வருவார்கள். சில வேளைகளில் கையை எடுத்து விடுவார்கள். நாங்கள் முக்குழித்து எழுவோம். பின்னர் எங்களை வாய்க்கால் நீரோடைப் பகுதியில் குளிக்குமாறு அனுப்புவார்கள். அதற்கும் இரண்டு இளைஞர்கள் அல்லது பெரியவர்கள் எங்களை கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். பின்னர் நாங்களாகவே வெளியே வந்து ஆடை மாற்றி, ஆலயத்திற்குச் சென்று வணங்கி, தேனீர் கடைக்குச் சென்று பிளேன்ரீ, வடை சாப்பிட்டு கச்சானும் வாங்கிக் கொண்டு நேரத்துடனேயே வாகனத்தில் ஏறி அமர்ந்து கொள்வேன். பெரியவர்கள் வருவார்கள் பாடசாலையில் "இடாப்பு" கூப்பிடுவது போன்று கூப்பிடுவார்கள். சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் கச்சான், கடலை வாங்கித் தருவார்கள். கீரிமலைக்குச் செல்லும் போது அமைதியாகச் சென்ற வாகனம் திரும்பி வரும் போது கலகலப்பாக இருக்கும். ஆடல், பாடல், கூத்து கும்மாளம் என்று வாகனத்திற்குள் நிகழும்.

சிறுவர்களாக இருக்கும் போது எங்களுக்குச் சில விடயங்கள் புரியவில்லை. வயதுவரத்தான் அவை புரிந்தன. ஏன் வாகனம் அவ் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாகனம் தரித்து நிற்கும் இடம் வரை ஏன் மேளதாளத்துடன் அழைப்பு இடம் பெற்றது என்றால், அக்காலத்தில் ஒரு பெரிய வாகனம் ஊருக்குள் வருவதற்கான முறையில் எமது வீதிகள் இல்லை. எல்லாம் ஒடுக்கமாகவே இருந்தன. இவையாவும் உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு.த.இராச லிங்கம் அவர்கள் 1977 ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற பிறகே எமது கிராமத்தின் சகல வீதிகளின் அகலிப்பு வேலைகளும் இடம் பெற்றன. அப்படியிருந்தும் இன்று வரை சில வீதிகளில் உள்ள சில இடங்கள் அகலிக்கப்படாத நிலையில் இப்பொழுதும் பெரிய வாகனங்கள் வர முடியா நிலையிலேயே உள்ளன. அதேபோன்று வாகனத்தில் ஏறி அமர்ந்திருக்கும் எங்களை பெரியவர்கள் இறக்கி கீழே விடும் போது கவலை அடைவோம். சில நேரங்களில் அவர்கள் மீது கோபம் கொள்வோம். வளரும் போது தான் தெரிந்தது அவர்கள் எங்கள் மீதுள்ள அக்கறையால் செய்த காரி யங்கள் என்று. என்ன தான் இருந்தாலும் அக்கால பெரியவர் களுடன் இளைஞர்களுடனும் வாழக் கிடைத்தது பெரும் பாக்கியமே.

நிகழ்வுப்பதிவு

# அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான அலங்கார உற்சவம் -2022

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அலங்கார உற்சவம் 16.08.2022 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 25.08.2022 தீர்த்தோற்சவம் கண்டு இனிதே நிறைவேறியது. முதலாம் நாள் அ.பௌநந்தி அவர்கள் "மன் உலகத்தினுள் இப்பிறவி" என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். நடன நிகழ்வை செல்விகள் ஜெ.சிவானுகா, ஜெ.சிவிஸ்திகா நிகழ்த்தினார்கள். 2 ஆம் நாள் கு.பாலசண்முகன் அவர்கள் "எமது வாழ்வியலில் ஆலய வழிபாடு" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். 3 ஆம் நாள் நா.நவராஜ் அவர்கள் "தாயிற் சிறந்த தயவு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். 4 ஆம் நாள் "புத்தகப்பை", "எலியார் எங்கே போனார்" ஆகிய இரு சிறுவர் நாடகங்கள் இடம்பெற்றன. 5 ஆம் நாள் த. அஜந்தகுமார் தலைமையில் இன்றைய நெருக்கடியான சூழலில் நாம் பெற்றவை அதிகமா? இழந்தவை அதிகமா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது. புலோலியூர் வேல்.நந்தகுமார், வாணிமுகுந்தன், பகீரதன், த.ஜீவராசா, மா.செல்வதாஸ், சா.ஹரிகரன் ஆகியோர் உரையாற்றினார்கள். 6 ஆம் நாள் சைவப்புலவர் பொன்.சுகந்தன் "ஆலய வழிபாடு" என்னும் தலைப்பில் உரையாற்றினார். 7 ஆம் நாள் வினாடி வினாப்போட்டி ஆசிரியர் திரு த.சுபாஷ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. 8 ஆம் திருவிழா, வேட்டைத்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் ஆலயத்திற்கு வேட்டைக்காக வரசித்திவிநாயகர் சென்று வேட்டை ஆடல் நிகழ்வு நடைபெற்றது. 9 ஆம் திருவிழா அன்று "காத்தவராயர் மான்மியம்" சஞ்சிகை வெளியீடும் வைகுந்தன் வைஷ்ணவி அவர்களின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றதோடு எம்பெருமான் கட்டுத்தேரில் வீதியுலா வந்தார். 10 ஆம் நாள் தீர்த்தோற்சவம் காலையில் நடைபெற்றது. 11 ஆம் நாள் பூங்கா வனத்தன்று பரிசளிப்பு விழா நடைபெற்றது. 1 ஆம், 3ஆம், 8ஆம், 9 ஆம் திருவிழாக்களின் போது இரவு உணவும், 2ஆம், 4ஆம், 10 ஆம், 11 ஆம் திருவிழாக்களின் போது அன்னதானமும் இடம் பெற்றது. வைரவர் சாந்தி 12 ஆம் நாள் மாலை இடம்பெற்றது.

- பரணீ








# மிருதங்க கலைஞர் செல்லையா செல்வராசா

■ க.பரணீதரன்

கலைஞர்களால் நிறைந்தது எமது மனோகராக் கிராமம். தலைமுறை தலைமுறையாக பல கலைஞர்கள் உருவாகி எமது ஊரை பார்போற்ற வைத்திருப்பவர்கள் எமது கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள் என பல வகைப்பட்ட கலைஞர்களும் எம்மிடம் உள்ளார்கள். வாத்தியக் கருவிகளை இசைக்கக் கூடிய கலைஞர்கள் பலர் வாழ்ந்த எமது கிராமத்தில் தற்போது வாத்தியக் கலைஞர்களாக மிகச் சிலரே காணப்படுகின்றார்கள். திரு செல்லையா செல்வராசா அவர்கள் எமதூரின் தலை சிறந்த மிருதங்க கலைஞராகவும், உடுக்குக் கலைஞராகவும் விளங்குகின்றார்.

செல்லையா செல்வராசா அவர்கள் 28.04.1948 இல் செல்லையா தங்கச்சி அம்மா ஆகியோருக்கு மகனாக கேவோலைக் குறிச்சியில் பிறந்தார். யா/தேவரையாளியில் கல்வியைப் பெற்றுக் கொண்ட இவருக்கு சைவப்புலவர் சி. வல்லிபுரம், முருகேசு, ச.சிவகுரு, செல்வராசா, ஆ.ம.செல்லத்துரை, பொன்னக்கா ரீச்சர், மீனாட்சியம்மா ரீச்சர் போன்ற ஆசிரியர்கள் கல்வியைப் போதித்தார்கள். இவருக்கு பாடசாலைக்காலத்திலேயே கலைகள் மீது ஆர்வம் காணப்பட்டது. பாடசாலையில் சிறு நாடகங்களிலும் பங்கேற்றிருந்தார். பாடசாலைக்கல்வியின் பின்னர் மிருதங்கக் கலையில் விருப்புக் கொண்டு அதனை கற்க விரும்பினார். இவரது ஆர்வத்தைப் பார்த்த இவரது மாமனார் வேலுப்பிள்ளை அவர்கள் எமது ஊர் அண்ணாவியார்களான எஸ.தம்பிஜயா, மு.பொன்னையா அவர்களிடம் இவரை அழைத்துச் சென்ற அவர்கள் ஆலோசனையின் படி இவரை மிருதங்கம் கற்க வி.வி.வைரமுத்து அவர்களிடம் அழைத்துச் சென்று வித்தியாரம்பம் செய்யப்பட்டது. தொடர்ந்து அரியாலை கிருஷ்ணபிள்ளை அவர்களிடம் 3 மாதங்கள் வரை மிருதங்கம் கற்றுக் கொண்டார்., பின்னர் கரவெட்டி நற்குணம் போன்றோரிடம் இக்கலையைக் கற்றுத் தேர்ந்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் மகாசிவராத்திரி தினத்தில் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக மிருதங்கம், உடுக்கு, டொல்கிக் கலைஞராக மேடையை சிறப்பித்துக் கொண்டிருப்பவராக இவர் காணப்படுகின்றார். பாடசாலை சார்ந்த கலை நிகழ்ச்சிகள் - தமிழ்த்தினப் போட்டிகள், கலாசார நிலையங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள், வாணி விழா நிகழ்ச்சிகள், ரூபவாஹினி, அரசடி விநாயகர், குச்சம் வைரவர், இலங்கை வானொலி போன்ற பல இடங்களில் இவர் மிருதங்க இசையை வெளிப்படுத்தியுள்ளார். ரூபவாஹினியில செ.விவேகானந்தன் அவர்களின் காத்தவராயன் கூத்து இடம்பெற்ற போது இவர் மிருதங்க கலைஞராகவும் உடுக்குக் கலைராகவும் செயறப்பட்டார். மிருதங்கக் கலையுடன் உடுக்கு வாத்தியத்தை இசைக்கக் கூடிய வல்லமை நிறைந்தவராகவும் இவர் விளங்கு கின்றார். காத்தவராயன் நாடகத்திற்கு பல தடவை உடுக்கு



வாத்தியத்தையும் இசைத்துள்ளார். இசைநாடகம், கூத்து என 250 இற்கு மேற்பட்ட நிகழ்வுகளுக்கு பக்கவாத்தியக் கலைஞராக செயற்பட்டுள்ளார். கவிஞர் நாடக மன்றம், மனோகர கான நாடக சபா போன்றவற்றின் பக்கவாத்திய கலைஞராக செயற்பட்டு வருகின்றார். இவரது அரங் கேற்றம் எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் ஆலயத்தில் இடம்பெற்றது. இவரது சகோதரி சந்திரா சிவதாசன் அவர்களும் தலைசிறந்த நாடக நடிகையும் ஆர்மோனியக் கலைஞருமாவார். யா/ஹாட்லிக்கல்லூரி, நெல்லியடி மத்தியகல்லூரி, விக்னேஸ்வராக்கல்லூரி, இருதயக்கல்லூரி, ஸ்ரீலங்காவித்தியாசாலை, தேவரையாளி இந்துக்கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, மாணிக்கவாசகர் காடசாலை எனப் பல பாடசாலைகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு மிருதங்கக் கலைஞராக செயற்பட்டு வருகின்றார்.

காத்தவராயன் கூத்தில் சின்னான் பாத்திரத்தில் நடித்து புகழும் பெற்றார். அல்வாய் மனோகர கான நாடக சபா, இவருக்கு 2019ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தன்று "மிருதங்க இசைவாணர்" என்னும் பட்டத்தை வழங்கி பெருமை கொண்டது. மேலும் ரூபவாஹினியில் நடைபெற்ற காத்தவராயன் கூத்து நாடகத்தில் பங்கு பற்றிய கலைஞர்களுக்காக கௌரவிப்பு நிகழ்விலும் கவிஞர் நாடக மன்றத்தால் இவருக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இவர் மிருதங்க கலைஞராக செயற்படும் போது இவருடன் ஆர்மோனியக் கலைஞர்களாக மு.பொன்னையா, அருட்செல்வம், தயாமணி, ஆனந்தராசா ஆகிய கலைஞர்கள் இணைந்து செயற்பட்டிருக்கிறார்கள். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் சிவராத்திரி தினங்களில் நீண்டகாலமாக திரு மு. பொன்னையா அவர்களுடன் இணைந்து பக்க வாத்தியக் கலைஞராக பல்வேறு நாடகங்களுக்கும், இசை நிகழ்வுகளுக்கும் மிருதங்கம் வாசித்துள்ளார். அண்மைக்காலமாக திரு ம.தயாமணி அவர்களுடன் இணைந்து பக்க வாத்தியக் கலைஞராக செயற்பட்டு வருகின்றார்.

அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வரும் இவர் 1984 ஆம் ஆண்டு ஆனந்தமணி அவர்களுடன் திருமண பந்தம் மூலம் இணைந்து கொண்டார். இவர்களது இல்லற வாழ்வின் பேறாக இவருக்கு தர்சிகா, தனுசா, அச்சுதன் ஆகிய மூன்று பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன. தர்சிகா அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கற்று கலைப் பட்டதாரியாகி இன்று பிரதேச செயலகத்தில் பணியாற்று கின்றார்.. தனுசா அவர்கள் வெளிவாரியாக கற்று கலைப்பட்டதாரியாகி இன்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்றார். மகன் அச்சுதன் மிருதங்க கலைஞராகவும் தனியார் நிறுவனத்தில் பணி பரிந்தும் வருகின்றார். மகனுக்கு மிருதங்க கலையை கற்பித்தவர் திரு செல்வராசா அவர்களே. இவருடைய மகனும் சிறந்ததொரு artist.

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தில் பல ஆண்டுகள் அங்கம் வகித்திருந்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் பத்தாம் திருவிழாவின் உபயகாரராகவும் இருந்து வருகின்றார்.

மிருதங்கக் கலையுடன் மட்டும் நின்று விடாது படம் வரைதல், சிறு கைவேலைப் பொருட்கள் செய்தல், மர வேலைகள் போன்றவற்றை அழகாக செய்யக்கூடியவர். மனோகரா உதைபந்தாட்ட அணியில் இளமைக் காலத்தில் அங்கம் வகித்திருந்தார்.

யாருடனும் முரண்படாத அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருவதுடன் கலைகளை இரசித்து நல்ல கலைஞர்களை வாழ்த்தி, கலை தொடர்பான செயற்பாடு களுக்கு ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கி கலை சார்ந்த விடயங்களுடன் இயங்குபவர்களுக்கு தன்னாலான உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறார் திரு செல்வராசா அவர்கள். இவ்வாறான சிறந்த கலைஞர்கள் பிரதேச செயலக கௌரவிப்புகள், அரச கௌரவிப்புகளுக்கு உள்ளாகாமல் இருப்பது வருத்தத்திற்குரியதே. இவ்வாறான கலைஞர் களுக்கு சரியான கௌரவம் வழங்கப்பட வேண்டும்.



எம்மவர்கள் சிறுகதை - 9

# ஆத்மாவின் ராகங்கள்

அல்வை சசி

எழில் பூத்துக் குலுங்கும் தீபாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் மீனாட்சி. "என்னம்மா இன்று என்னை புதிதாய் பார்க்கிறாய்" என்று குறும்புடன் கேட்டாள், தீபா, "உதுக்கு மட்டும் குறைச்சலில்லை, இவ்வளவு அழகைக் கொடுத்த கடவுள் உனக்கு புத்தியை மட்டும் கொடுக்க வில்லையே... எவ்வளவோ அழகான புடவைகள் இருந்தும் நன்றாக உடுத்திக்கொள்ள வேண்டும் என்ற அறிவைக் கொடுக்கவில்லை" என்று தாய் குறைப்பட்டுக் கொண்டாள்.

"ஏனம்மா, ஆடம்பரமாக நான் இல்லை என்பதாலா எனக்குப் புத்தி இல்லை என்கிறாய்; கடவுள் இந்த நல்ல அறிவை எனக்குக் கொடுத்திருக்கிறாளே என்று நான் தினமும் நன்றி செலுத்துகிறேன். இன்று நாளுக்கு நாள் மாறிக்கொண்டு போகின்ற புதுடிசைன்களிலெல்லாம் உடையும், நகையும் வாங்குவதானால் அப்பாவுக்குத் தானே வீண் செலவு."

பேசிக்கொண்டே சென்ற மகளைத் தாய் இடை மறித்தாள். "போதுமடி உன் பிரசங்கம், உன் அறிவு இப்படி வேலை செய்வதால் தான் உன்னைப் பார்க்க வாறவங்களும் பெம்பிளையைப் பிடிக்கேல்லை என்று சொல்லுறாங்கள். இதனால் மட்டும் உன் தகப்பனுக்கு மனக்கஷ்டம் இல்லையே..."

ஆத்திரத்துடன் தாய் பேசிய பேச்சு தீபாவை மனவேதனைக்கு உள்ளாக்கியது.

"என்னுடைய பேச்சு உனக்கு விசித்திரமாத்தான் இருக்கும். எனக்கு இனியும் மாப்பிளை தேட நீயோ அப்பாவோ முயற்சிக்க வேண்டாம். என் வயதில் ஒரு பிள்ளை இருந்தால் உழைக்க மாட்டானா. நானும் இனி ஏதாவது வேலை தேடிக் கொள்கிறேன். என்னுடைய போக்குகள் பிடித்தால் ஒருவன் என்னைக் கட்டிக்கொள்ளட்டும். இல்லாவிடில் நான் இப்படியே இருப்பேன்" என்று உரத்த குரலில் கூறினாள் தீபா.

"என்ன, பெண் பார்க்க வருகிற நாளும் அதுவுமா தாயும் மகளும் சண்டை செய்யிறியள்" என்று கேட்டுக்கொண்டே வந்த தீபாவின் தந்தை வெளியே காய்பிஞ்சு விற்கும் பெண் வந்து நிற்பதைக் கூறினார்.

"என்னடி முத்தம்மா காய்கறிகளைப் பார்க்க, பகட்டாகத் திரியிற பெண்களைப்போல இருக்கு. ஆனாலும் என்ன எல்லாம் வெறும் மாயம் தான்," என்றவாறே கூடையுள் காய்கறியை வாங்கிப் போட்டுக்கொண்டு திரும்பிய தீபா தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கும் அவனைப் பார்த்து முறைத்தாள்.

"நல்ல வாயாடி தான்" என்று முணுமுணுத்தவாறே அவ்வாலிபனும் பதிலுக்கு முறைத்தான். உடனேயே தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "வேலுப்பிள்ளை வீடு இது தானே" என்று கேட்டான்.

"ஆமாம் வாருங்கள்" என்றாள் தீபா, குரலில் பணிவை வரவழைத்துக் கொண்டு.

""எங்கே வெளியே போ" என்று சொல்லி விடுவீர்களோ என்று நினைத்தேன்" என்று குறும்பாகக் கூறியவாறே அவனும் கதையை வளரர்த்தான்.

"யாருடன் தீபா கதைத்துக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டவாறே வந்த வேலுப்பிள்ளை, அவனைக் கண்டதுமே "வாருங்க தம்பி, வாருங்க" என்றார் பர பரப்புடன்.

அவனுக்குத் தந்தை செய்யும் மரியாதையைக் கண்டதுமே, அவள் "அவரா" என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

தாய் தயாரித்துக் கொடுத்த தேனீரை எடுத்துச் செல்லும் போதே அவனிடம் அப்படித் தான் நடந்து கொண்டமையை இட்டு வேதனையும் அடைந்தாள்.

எதுவித அலங்காரமுமின்றி சற்றுமுன் கண்ட அதே கோலத்துடன் அழகுப் பதுமையாய் அவள் வந்து நிற்பதைக் கண்ட அவன், வெளியேயே ஆழமாகப் பார்த்துக் கொண்டான்.

எதுவித அலங்காரமுமின்றி வந்து நிற்கும் தன் மகளைப் பற்றி ஏதோ சமாதானம் சொல்ல முயன்ற வேலுப் பிள்ளையை இடை மறித்தான், அவன்.

"பொன்நகையை விட புன்னகை தான் எனக்குப் பிடிக்கும். அதனால் தான் நானும், மாலை வரவேண்டியவன் எதுவித அறிவித்தலும் இன்றி இப்போதே வந்தேன். ஆனாலும் பெண்ணிடம் நான் சில கேள்விகள் கேட்க வேண்டும், கேட்கலாமா என்றான் அவன்.

"என்ன கேட்பானோ, இவள் என்ன பதில் சொல் வாளோ" என்று தயங்கிப் போயிருந்த தந்தையையும் முந்திக் கொண்டு தீபாவே சொன்னாள். "தாராளமாகக் கேளுங்கள்; இயன்ற வரை எதையும் ஒளிக்காமல் பதில் சொல்கின்றேன்."

"தீபா, சற்று..." என்று வேலுப்பிள்ளை இழுப்பதைக் கண்டு அவன் கலகலவென்று சிரித்துக்கொண்டான்.

"உங்களுடைய பெண்ணுக்கு உள்ள கோபத்தைத்தான் நான் வெளியில் நின்றபோதே கண்டு கொண்டேனே. இவை வேறு சில விபரங்களுக்காக நான் கேட்கப்போகும் கேள்விகள்" என்று அவன் கூறியதுமே, பதறியவராய், "என்னம்மா செய்தாய். இவருடன் சண்டைக்கா போனாய்" என்று கேட்டார்" வேலுப் பிள்ளை.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னைப் பற்றியும் சில விபரங்களைச் சொல்ல வேண்டுல்லவா" என்றவாறே அவன் தொடர்ந்து பேசினான்.

"என்னுடைய சம்பளமே முந்நூறு போய் தான். என்னுடைய குடும்பத்தில் எட்டுப்பேர். நோயில் படுத்திருக்கும் என் தந்தை, பாடசாலைக்குச் செல்லும் சகோதரிகள் என்று என் பொறுப்பிலேயே என் குடும்பம் இயங்குகிறது. முகம் சுளிக்காமல்

என் குடும்பச் சுமையையும் தாங்கிக் கொள்ளும் பக்குவம் உள்ள ஒருத்தியைத்தான் நான் மணந்துகொள்ள முடியும்."

"தன் கணவனின் சுகதுக்கங்களில் பங்கு கொள்ள நினைக்கும் ஒரு மனைவிக்கு இது ஒரு கஷ்டமா" என்று தீபா கேட்கத் துடித்தாள். ஆயினும் தன்னை அடக்கிக் கொண்டாள். "பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு இவை எல்லாம் ஒரு கஷ்டமா?" என்று வேலுப்பிள்ளையே கேட்டுக் கொண்டார்.

"இல்லை; நானும் என் இயல்புக்கு ஒத்த ஒரு பெண்ணைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். முதலில் சம்மதம் தெரிவித்து விட்டுப் பின்னர் கண்களைக் கசக்குவதோ, என் குடும்பத்தினரைப் பிரிந்து சென்று தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று முரண்டு பிடிப்பதோ எனக்குப் பிடிக்காது. அதனால் தான் சகலவற்றையும் முதலிலேயே கூறிக் கொள்கிறேன்" என்றான் அவன்.

சம்மதத்திற்கு அறிகுறியாய் முகம் சிவக்க தலை குனிந்தாள் தீபா.

"அவர்களைச் சற்று நேரம் தனிமையில் கதைக்க விட வேண்டும்" என்ற எண்ணமுடையவராய் வேலுப்பிள்ளை உள்ளே சென்றார்.

தந்தையைத் தொடர்ந்து உள்ளே செல்ல முயன்ற தீபாவைத் தடுத்தான் அவன்.

"எங்கே செல்கின்றீர்கள். என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலே செல்கிறீர்களே. சற்றுமுன் காணப்பட்ட உங்களின் துடுக்குத் தனம் எங்கே ஓடி ஒளிந்தது?"

அடுக்கிக்கொண்டே சென்றான் அவன். அவளோ நாணமுற்றவளாய் நிலத்தில் கோடு கிழித்தாள். அவளை யறியாமலே அவளுள்ளே ஆத்மாவின்ராகங்கள் இசை மீட்டின.

**நிகழ்வின் பதிவு**

அல்வாய் மனோகரா "திரு இரத்தினவாசகம்" திருநாவுக்கரசு செல்வநாதனின் ஏற்பாட்டில் மயில்வாகனம் ஜெயக்கொடி அவர்களின் பவளவிழா நிகழ்வானது திரு.ச.செல்வானந்தன் தலைமையில் 13.08.2022 சனி பி.ப 5மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. தொடர்ந்து இறைவணக்கப் பாடலை விழா நாயகனின் பேர்த்தி செல்வி றுபேஷ் ஹர்ஷினி பாடினார். வரவேற்புரையை ஐ.உதயரத்தினம் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை மா.அனந்தராசன், சீ.இராசநாயகம், பா.வெற்றிவேல், வெ.சுப்ரமணியம் (அண்ணாசிலையடி) ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை விழா நாயகனின் சார்பாக அவரது மகள் திருமதி. சுகன்யா றுபேஷ் நிகழ்த்தினார். நன்றியுரையை ஏற்பாட்டாளர் சார்பாக அவரது மைத்துனன் செல்லக்குட்டி கணேசன் நிகழ்த்தினார்.

- செ.கணேசன்



சிவராசா நிகாசன் அவர்கள் 12.08.2022 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்புவிழாவில் Higher national diploma in English(HNDE) பட்டத்தைப்பெற்று எமதூருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



மகேஸ்வரன் விந்தாகரன் அவர்கள் 12.08.2022 அன்று அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்புவிழாவில் ACCA ( The Association of chartered certified Accountants) பட்டத்தைப்பெற்று எமதூருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



திருதிருமதி வேல்மணி இந்திராணி தம்பதிகளின் புதல்வன் தர்சன் அவர்களும் திருதிருமதி கருணாகரன் தம்பதிகளின் புதல்வி தேன்மொழியும் 2022.08.24 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்

இந்திரபாலா சுதர்சினி தம்பதியினருக்கு 02.08.2022 அன்று பிருத்துவின் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.



**அஞ்சலி**
**கணபதிப்பிள்ளை வினாயகராசா**
**01.06.1955 - 26.08.2022**

அல்வாய்க் கிராமத்தின் மடத்துக் கடவைக் குறிச்சியில் கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதிகளுக்கு 01.06.1955ல் அமரர் வினாயகராசா அவர்கள் இளையமகனாகப் பிறந்தார். திருமதி.மகாமணிதேவி சதாசிவம், பாக்கியராசா, செல்வராசா, திருமதி.ஸ்ரீமணிதேவி சிவநேசன், மகேந்திரராசா இவருக்கு சகோதரங்களாக கிடைத்தார்கள். இவரை "திரவியம்" என இவரது உறவினர்கள் அழைத்து வந்தார்கள். ஆரம்பக் கல்வியை யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் கற்றார். பாடசாலைக் காலத்தில் சிறந்த மெய்வல்லுனராகவும், பாடசாலை உதைபந்தாட்ட அணியலும் பங்கு பற்றினார். மனோகரா உதைபந்தாட்ட அணிக்காக இவருடைய சகோதரர்கள் பாக்கியராசா, மகேந்திரராசா ஆகியோர்களுடன் சேர்ந்து பல உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் விளையாடி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவரும் உதைப்நதாட்ட அணிக்காக விளையாடிய பெருமையையு் உடையவர். இவரது சகேதாரன் பாக்கியராசா அவர்கள் அல்வாயின் சிறந்த கட்டடக்கலையராக விளங்கி வருபவர். அவருடன் சேர்ந்து கட்டடக்கலையில் ஈடுபட்டார். பின்னர் கரவெட்டி பிரதேச சபையில் ஊழியராக அரச நியமனம் பெற்று தனது அறுபதாவது வயதில் ஒய்வு பெற்றார். 1987ம் வருடம் தனது சகோதரியின் கணவரான சிவநேசன் அவர்களது இளைய சகோதரியான சத்தியகுமாரி அவர்களுடன் இல்லற பந்தத்டதில் இணைந்து நல்வாழ்வு வாழ்ந்து, வானதி, எழில் நிலா, கிருஷிகேசன் ஆகிய மூன்று பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுக் கொண்டார். பிள்ளைகளுக்கு நன்கு கல்வியூட்ட வேண்டும் என முனைப்பாகவிருந்து மூன்று பிள்ளைகளையும் சிறப்புற கற்பித்தார். மூத்த மகள் வானதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பட்டத்தினை பெற்றதுடன் தபால் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தற்சமயம் கரவெட்டி தபாலகத்தில் ஒரு தபால் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இளையமகள் எழில்நிலா இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணி (B.A) பட்டத்தினை நிறைவு செய்துள்ளார். கிருஷிகேசன் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் தனது ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்து நெடுந்தீவு மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிகின்றார். லக்னீஸ், அஸ்விகா, சஸ்விகா ஆகிய மூன்று பேரப்பிள்ளைகளுடன் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் மூன்றாம் விழாவான மதுரத்திருவிழாவின் உபயகாரர்களில் ஒருவராக விளங்கினார். நோயின் காரணமாக 26.08.2022 அன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அதிகாலை வேளையில் எல்லாம் வல்ல ஆலடி பாலகணபதியின் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார். ஊரில் எல்லோருடனும் அன்பாக பழகி அன்புடன் வாழ்ந்து இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கிய வினாயகராசா அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

\- பரணீ

---



**அஞ்சலி**
**இராஜேஸ்வரி - தணிகாசலம்**
**15.09.1938 - 27.08.2022**

அல்வாய்க்கிராமத்தின் புதுவீட்டுக் குறிச்சியின் சவலை கதிராசி தம்பதியினருக்கு மகளாக இராஜேஸ்வரி அவர்கள்15.09.1938 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு சகோதரிகளாக மகேஸ்வரி, தருமவதி ஆகியோர் கிடைக்கப் பெற்றார்கள். மிகவும் செல்லமாக வளர்ந்த இவருக்கு ஆசிரியர் தணிகாசலம் அவர்களை இவரது பெற்றோர் மணம் முடித்து வைத்தார்கள். மிகவும் இனிமையான வாழ்க்கை வாழ்ந்து அதன் பேறாக இவர்களுக்கு தயாவதி, சத்தியவதி, உமா, இராஜேஸ்வரன் இராஜவரோதயன் ஆகிய பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன. இராஜேஸ்வரி அவர்களை ஊரில் உள்ள அனைவரும் "ராசா" என அன்பாக அழைப்பார்கள். ராசா அவர்கள் முதுமைக் காலத்தில் புதுவீட்டுச் சந்தியில் பின்னேரங்களில் அமைதியாக இருந்து பத்திரிகை வாசித்து கொண்டிருப்பார். வீதியால் செல்பவர்களை அழைத்து சுகம் விசாரிப்பார். நாங்கள் பத்திரிகையின் தொடர் வாசகரும்கூட; சந்தாதாரரும்கூட. மரணத்திற்கு ஒரு கிழமைக்கு முன்னரும் கூட அவ்வீதியால் நான் சென்ற சமயம் நாங்கள் பத்திரிகையை வாசித்து கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் "அப்பு உன்ரை பேப்பர் தான்ரா படிக்கிறன். சுப்பரா வருகுதடா, இன்னும் எங்கடை பழைய ஆக்களை பற்றியெல்லாம் எழுதுவிச்சு போடு..." எனக் கூறினார். இராஜேஸ்வரி அவர்கள் சில நாடகங்களிலும் அக்காலத்தில் நடித்திருக்கிறார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய 2 ஆம் திருவிழா உபயகாரராகவும் அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தின் 4 ஆம் திருவிழா உபயகாரராகவும் விளங்குகிறார். அல்வாய் சாணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் வசந்த மண்டபத்திற்கு தெற்குப்புறமாக வெளிப்புறத்தில் ஒரு மண்டபத்தையுய், அதனோடு இணைந்த ஓர் அறையையும் உபயமாக உபகரித்துள்ளார். மேலும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களான யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, யா/ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தனது கணவனின் பெயரால் 2000 ஆம் ஆண்டில் இருந்து பணப்பரிசில்களையும் வழங்கி வந்தவர் என்பது பாராட்டிற்கு உரியது. தீபிகா, திலீபன், பிரியங்கா, பிருந்திகா, தணிகா, தாரகா, தணீசன், மதீசன், ஜதீசன், ராகுல், விஷ்ணுஜன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் யக்சித், யஸ்மிகா, ஜஸ்விகா, திருஷன், வினேஷ் ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்வான வாழ்வை வாழ்ந்து எல்லோருடனும் அன்பாக பழகி வாழ்ந்து வந்தவர். மூப்பின் காரணமாக 27.08.2022 அன்று இறைவனது பாதார விந்தங்களை சென்றடைந்தார். அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

\- ப ரணீ

எம்மவர்கள் சிறுகதை -10

# சொந்தமில்லாத பந்தங்கள்

■ ப.விஷ்ணுவர்த்தினி

இறைவனை நொந்து நொந்து தான் மீதமுள்ள என் வாழ்நாளையும் கழிக்க வேண்டும் என்ற விதமாக எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

யாரை நொந்து என்ன பயன்? எல்லாம் எம் தலைவிதி.

தலைவிதி என்றால் அதை ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் சேர்த்துத் தான் இறைவன் எழுதுவானோ?

இந்த முட்கம்பி வேலிக்குள் சிறைப்பட்டிருக்கும் எல்லோருக்குமே ஒரே தலைவிதி தானோ?

எங்களோடு சேர்ந்து இந்த நரக வேதனைகளை அநுபவிப்பதற்கு இந்தப் பிஞ்சுகள் என்ன பிழை செய்தார்கள்?

அந்த மூன்று குழந்தைகளையும் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மூவரும் தங்களுக்குக் கிடைத்த உணவை "அரக்கப் பரக்க" சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். பாவம்! இந்த முகாமுக்கு வந்த பின்பு தான் இப்படியாவது சாப்பிட முடிகிறது. கடந்த ஒன்றரை வருடங்களாக உயிர்க் குலையையும் கையில் பிடித்துக் கொண்டு, அலைந்து திரிந்த பெற்றோரின் பின்னால் இழுபட்டுத் திரிந்த இவர்களுக்கு சாப்பாடும் தண்ணீரும் அரை வயிறும் கால் வயிறும் தான்.

வேகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அவர்களைப் பார்க்கையில் எனக்கு அவர்கள் மேல் பச்சாதாபமே மேலிடுகிறது. அழகான உடல் வாகு கொண்ட அக்குழந்தைகளைப் பார்த்து, எனக்கு அப்படிப் பேரப் பிள்ளைகள் அமையவில்லையே என்று எத்தனை நாள் கவலைப்பட்டிருக்கிறேன். இன்று அந்த அழகெல்லாம் கெட்டு, எலும்பும் தோலுமாய் இருக்கும் இவர்கள் பெற்றோரையும் இழந்து என் அரவணைப்பில்...

"கடவுளே!" என்று முன்பெல்லாம் வழக்கமாகச் சொல்லி வந்த அந்த வார்த்தை இப்போது தொண்டைக் குழிக்குள்ளேயே அமுங்கிப் போய் விடுகிறது.

தெய்வம் என்று ஒன்று இருந்திருந்தால் இவ்வளவு துன்பமும் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்குமா? குஞ்சு குருமான் முதல் கொண்டு கிழங்கள் வரை எவ்வளவு தூரம் அல்லாடிப் போய் விட்டார்கள்? இந்தக் குழந்தைகளும் தான், குதூகலிப்பும் கும்மாளமுமாய் ஓடித் திரிந்தவர்கள் தானே. இன்று பரட்டைத் தலையும் தடி போன்ற மெலிந்த உடலும் கொண்டவர் களாய் அரையும் குறையுமாய், அழுக்கேறிய துணிகளை உடலில் சுற்றிக் கொண்டு, போரின் அடையாளங்களைச் சுமப்பவர் களாய்த் தெரிகின்றனர்.

இவர்கள் என்னிடம் வந்து சேர்ந்த கதையே பெரிய கதை. இவர்கள் எனக்கு உறவோ, இரத்த பந்தம் உள்ளவர்களோ இல்லை. இவர்களின் பெற்றோர்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் காதல் திருமணம் செய்து கொண்டு யாழ்ப்பாணத்தி லிருந்து வந்து கிளி நொச்சியில் குடியேறியவர்கள். என்னுடைய வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருந்த காணியொன்றில் குடிசை யொன்றை அமைத்துக் கொண்டு அவர்கள் தமது வாழ்க்கையைத் தொடங்கினர்.

அவர்களின் அறிமுகம் எனக்கு உடனடியாகவே கிடைத்தது. அப்போது நான் என் சீவியத்தை ஓட்டுவதற்காய் பிட்டு, இடியப்பம், தோசை என சாப்பாட்டு வகைகளை எல்லாம் செய்து விற்று வந்தேன். என்னோடிருந்த என் ஒரே ஒரு பிள்ளையும் இந்த நாட்டுச் சூழலுக்குப் பயந்து வெளிநாடு சென்று விட, நான் என் முதுமைக் காலத்தைத் தனியே கழித்துக் கொண்டிருந்தேன்.

என் பிள்ளையை நினைக்கும்போது எனக்கு இப்போதும் கண்ணீர் முட்டிக் கொண்டு வருகிறது. மணம் முடித்து நீண்ட காலத்துக்குப் பிறகு பிறந்த ஏக புத்திரன் அவன். பிறக்கும் போதே தகப்பனைத் தின்று விட்டுப் பிறந்தவன். நிர்க்கதியான நிலையில், அவனை வளர்த்து ஆளாக்குவதற்காகவே நான் படாத பாடுபட்டு வந்தேன்.

அவனை நான் "பொத்திப் பொத்தி" வளர்த்தேன். விடலைப் பருவத்தையும் கடந்து வளர்ந்த அவனின் வளர்த்தி "கண்ணுக்குள் குத்துவதாக" இருந்தது. யார் யாரையோ கும்பிட்டு மன்றாடி அவனை அரபு நாடொன்றுக்கு அனுப்பி வைத்த பின்பு தான் மனதுக்கு நிம்மதி. ஆனாலும், தகுந்த வேலையுமின்றி, அதிக சம்பளமுமின்றி அங்கும் அலைந்து கொண்டிருந்தான் என்பது மட்டும் தெரிந்தது.

என்னுடைய மகனைப் பிரிந்த சோகத்திலிருந்த எனக்கு, அந்தப் புதுத் தம்பதியினரின் தொடர்பு ஒத்தடமாக இருந்தது. என்னிடம் தினமும் காலைச் சாப்பாடு வாங்கிச் செல்ல வந்தவர்கள் என்னுடன் ஒட்டிக் கொண்டார்கள். அவன் முகுந்தன்; அவள் சுமதி. அவர்களுடைய தொடர்பினால் சவூதி யிலிருந்த என் பிள்ளையுடனும் இடையிடையே தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது.

முகுந்தன் முயற்சி உள்ளவன்; சிறந்த உழைப்பாளி. சுமதி சம்பாத்தியக்காரி. கணவனின் உழைப்பிலும் கணிசமான தொகையைச் சேமிக்கத் தொடங்கினாள். கடவுள் மூன்று குழந்தைகளையும் அவர்களுக்குக் கொடுத்தான். மூன்று குழந்தைகளும் செல்லமாகத் தான் வளர்ந்தார்கள்.

விதி யாரைத் தான் விட்டது. யுத்தம் எல்லோரையும் சூறையாடியது. இலட்சக் கணக்கானோரின் வாழ்க்கையுடன் விளையாடிய யுத்தம் இவர்களையும் விட்டு வைக்கவில்லை.

ஒரு வேளை சாப்பாட்டுக்காக கையிலிருந்த பொருட்கள் எல்லாவற்றையும் இழந்தனர். உயிரைப் பாதுகாக்க ஊர் ஊராய் இடம்பெயர்ந்தனர். உடுத்த துணியுடன் நாட்கள், வாரங்கள், மாதங்கள் என பதுங்கு குழிகளுக்குள்ளேயே பதுங்கி இருந்தனர்.

வானில் வட்டமிட்ட "பருந்துகள்" எப்போது குண்டு மழை பொழியும் எனத் தெரியாமல் வெளியே தலை காட்டவே பயந்தனர்.

இந்த விதி எல்லோருக்கும் பொதுவானது. பாதுகாப்புத் தேடி ஊர் ஊராய் அலைதல்; பதுங்கு குழி வாழ்க்கை; உணவும் நீரும் அருந்தலாகிப் போன பட்டினி வாழ்வு; எங்கே போய் முடியும் என்ற ஏம்பலிப்பு.

உணவுக்காகவும் உடலியற் தேவைகளுக்காகவும் வெளியே தலை காட்டியவர்கள் குண்டு மழையில் நனைந்து உடல் சிதறிப் பலியாகினர். எங்கும் ஓலம்; எங்கும் அவலம்; எங்கும் பிணக் குவியல்கள்; எங்கும் இரத்த வாடை.

முகுந்தனும் சுமதியும் கூட குழந்தைகளையும் சுமந்தபடி விதியின் பாதையில் எற்றுண்டு அலைந்தனர். எத்தனை எத்தனை கொடுமை நிறைந்த சம்பவங்கள், காட்சிகள்.

-குடும்பமாகவே ஒரு கணத்தில் உடல் சிதறி மடிந்தவர்கள்

-குழந்தை பிறந்து இரத்த வாடையும் ஈரமும் காயும் முன்னரே "ஷெல்" பட்டு மடிந்த தாயும் குழந்தையும்

-நடக்க முடியாமல் பின்தங்கியதனால் குண்டு மழையில் சிக்கி மடிந்த முதியவர்கள்

யாரையும் எவரும் காப்பாற்ற முடியாத அவலம். தங்கள் தங்கள் உயிரே பெரிதென எண்ணி ஒவ்வொருவரும் ஓடிக் கொண்டிருக்கும் அவலம். மனிதம் செத்துக் கொண்டி ருந்தது.

காயம் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டி, அவளிடம் ஓடிச் சென்ற வேளை மீண்டும் அவ்விடத்தில் வந்து வீழ்ந்து வெடித்த ஷெல்லில் சுமதி அந்த இடத்திலேயே சிதறிப் போனாள். முகுந்தன் கால்களை இழந்து முனகிக் கொண்டிருந்தான்.

தெய்வாதீனமாகத் தான் அவ்விடத்துக்கு வந்தேன். மூன்று குழந்தைகளும் முகுந்தனை நெருங்கி நின்று அழுது கொண்டிருந்தார்கள். அருகில், உருத் தெரியாமல் சுமதியின் உடல். என்ன கொடுமை!

என்னைக் கண்டதும் அந்த வேளையிலும் முகுந்தனின் கண்களில் சிறு ஒளி. குழந்தைகள் என்னைச் சுற்றி என் கால் களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அம்மம்மா" என்று அழுதார்கள்.

முகுந்தன் களைக்கக் களைக்க, அந்த வேளையிலும் தன் அவலங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. சொற்ப நேரத்திலேயே அவனின் உயிரும் பிரிந்தது. ஒரு கணம் தான் அந்த வேதனை. உடனடியாகவே உயிர் பற்றிய பயம் தலை தூக்க, பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஓடினேன். கடைசிக் குழந்தை கைக் குழந்தை; தன் கைகளால் என் இடுப்பைச் சுற்றிக் கொண்டது. மற்றைய இரு பிஞ்சுகளும் என்னோடு இழுபட்டார்கள்.

அந்தப் பிரதேசத்தை விட்டு எல்லோரும் கட்டாயமாக வெளியேறி விட வேண்டும் என்ற அறிவிப்பு வந்ததுமே, சனத்தோடு சனமாக, நானும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்றேன்.

முட்கம்பியால் சுற்றி வர வேலி அடித்த கூடார மொன்றுள் முகாம் வாழ்க்கை. வெயில், மழை, குளிர் எல்லாம் சர்வ சாதாரண மாகிப் போக, குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு, கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போய் கண்ணீரும் கம்பலையுமாக என் வாழ்வு இந்த ஒன்றரை வருடங்களாகக் கழிந்து போய்க் கொண்டிருக்கின்றது.

சவூதியில் இருக்கும் என் பிள்ளையின் நினைவு அடிக்கடி தலை தூக்கினாலும், இந்த மூன்று பிள்ளைகளினதும் அவலம் என்னை வாட்டி வதைக்க, இவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற யோசனையில் இவர்களைச் சுற்றியே என் நினைவுகள் வட்டமிடுகின்றன.

இன்று காலையில் தான் சில அதிகாரிகள் வந்து சொந்த இடத்திலேயே என்னை மீண்டும் குடியேற்ற அழைத்துப் போக வருவதாகச் சொல்லியிருந்தார்கள். அப்போது முதல் இந்தக் கணம் வரை இக்குழந்தைகளைப் பற்றிய யோசனையே என்னை அரித்துக் கொண்டிருக்கிறது.

-இவர்கள் மூவரையும் என்னால் காப்பாற்ற முடியுமா?

-மனித சஞ்சாரமே குறைந்த மண்ணில் என் முன்னைய தொழிலைப் பார்க்க முடியுமா?

-இந்த மூன்று குழந்தைகளையும் அழைத்துச் சென்ற வேளையில் எனக்கு ஏதாவது நடந்து விட்டால் இக்குழந்தைகளின் கதி?

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் கைக் குழந்தையைத் தூக்கிக் கொள்கிறேன். ஏனைய இரு குழந்தைகளையும் அணைத்து முத்தமிடுகிறேன். அவர்களுக்கு என்ன விளங்கப் போகிறது? அலங்க மலங்க என்னை விழித்துப் பார்க்கிறார்கள்.

"மீனாட்சி, மீனாட்சி..."

என்னைப் பெயர் சொல்லி அதிகாரிகள் அழைக் கிறார்கள்.

கைக் குழந்தையுடன் நான் மெல்ல நகருகிறேன்.

என்னைச் சுற்றி என் கால்களைப் பிடித்துக் கொண்டு நிற்கும் இரு குழந்தைகளினதும் கைகளை மெல்ல எடுத்து விடுகிறேன்.

"அம்மம்மா இப்ப வருவன், இங்கை நில்லுங்கோ குஞ்சுகள்..."

என்னை அறியாமலே பீறிட்டுக் கொண்டு வரும் கண்ணீரை அடக்க மாட்டாதவளாய், அவர்களைக் கலங்கிய கண்களோடு நோக்குகிறேன்.

இந்த உலகத்தின் சூது, வாது தெரியாதவர்களாய் அக்குழந்தைகள் என்னையே "குத்திட்டு"ப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியாதிருக்கிறது.

"இந்தக் குழந்தையை வளர்த்து, எனக்கு ஒன்றென்றால் யாரிடமாவது கையளிக்கலாம். இக்குழந்தைக்கு விதியிருந்தால் என் பிள்ளையிடமே சேர்ப்பிக்கலாம். இக்குழந்தையை நான் தத்தெடுத்தது போல மற்றப் பிள்ளைகளுக்கும் யாராவது வாழ்வு கொடுக்க முன்வருவார்கள்"

என் நடையைச் சற்று விரைவாக்கிக் கொண்டு, காத்திருக்கும் பஸ்ஸை நோக்கிச் செல்கின்றேன்.

தூரத்தில் அந்த இரு குழந்தைகளும் என்னைப் பார்த்துக் கொண்டே நிற்பது தெரிகிறது.

மீண்டும் என்னிடத்தில் இறை நம்பிக்கை தொற்றிக் கொள்கிறது.

"கடவுளே, இவர்களைக் காப்பாற்றும்!"

என் அந்தராத்மா மன்றாட்டமாய் அவனிடம் இறைஞ்சுகிறது.